756

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 MAR 1911
MADRAS.

உ

சபாபதி துணை.

ஸ்ரீ

ஞானசம்பந்த குருவே நம:

கௌரிமாயூரமான்மிய தாற்பரிய
சங்கிரகம்.

இவை
திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை
ஆதீனம் மகா வித்வான்
ஸ்ரீமான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள்
குமாரர்
களம் சிதம்பரம் பிள்ளையவர்கள்
வேண்டுகோளின்படி
மேற்படி ஆதீனம் மகாவித்துவசிரோன்மணியாகிய
ஸ்ரீமான் சபாபதி நாவலரவர்கள்
மாணாக்கரும்
நேய்க்குப்பை
மகா-ள-ள-ஸ்ரீ பொன்னம்பலபிள்ளையவர்கள்
குமாரருமாகிய
குஞ்சிதபாதம் பிள்ளையவர்கள்
செய்தது

இந்நூலாசிரியர் தமையன் குமாரர்
கே. சண்முகம்பிள்ளை
என்று வழங்கும்
சிதம்பரம் பிள்ளையால்
பப்ளிஷ் செய்யப்பட்டது.

THE "SARASVATHI VILAS PRESS," MAYAVARAM

உ

பரமபதி துணை.

ஸ்ரீ

ஞானசம்பந்த குருவேநம:

கௌரிமாயூரமான்ய தாற்பரிய சங்கிரகம்.

இவை

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறையாதீனம்

மகாவித்வான்

ஸ்ரீமான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள்

குமாரர்

கனம் சிதம்பரம் பிள்ளையவர்கள்

வேண்டுகோளின்படி

ஷை ஆதீனம் மகாவித்துவ சிரோன்மணியாகிய

ஸ்ரீமான் சபாபதி நாவலரவர்கள்

மாணாக்கரும்

நேய்க்குப்பை

மகா-ள-ள-ஸ்ரீ பொன்னம்பலபிள்ளையவர்கள்

குமாரருமாகிய

குஞ்சிதபாதம் பிள்ளையவர்கள்

செய்தது

இந்நூலாசிரியர் தமையன் குமாரர்

கே. சண்முகம்பிள்ளை

என்று வழங்கும்

சிதம்பரம் பிள்ளையால்

பப்ளிஷ் செய்யப்பட்டது.

PRINTED BY

R. Venkatrama Iyer

"Sarasvathy Vilas Press"

Mayavaram.

1910.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
15 MAR 1911
MADRAS

484
294 535

உ

சிவமயம்.

இந்நூல்

மாட்சிமைதங்கிய பல கனத்னவந்தர்களுடைய

தருமப் பொருளுதவியால்

அச்சியற்றப்பட்டது.

OFFICE OF THE RE...
REGISTD.
15 MAR
MADRA...

உ
பரமபதி துணை
ஸ்ரீ
ஞான சம்பந்தகுருவேநம:

கௌரிமாயூரமான்மிய தாற்பரிய

சங்கிரகம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெலா மானமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

விநாயகக் கடவுள் துதி.

பூமேவுதன்னடியார்தமை விளக்கி முந்திருக்கைப் [புணர்த்தவல்ல
தேமேவுபெருங்கருணை யாவனென றெரிப்ப மறைத் [திருநாமங்கள்
பாமேவு பலவிருக்க வகத்தியமால் கனிமொனும் பேர் [பரித்து நாளு
மாமேவு மயிலாடுதுறைத்தளிவாழ் பெருமானை [வணக்கஞ்செய்வாம்

புண்ணிய பூமியாகிய பரதகண்டமெனப்படும் இந்த தேசத்தில் தேவாலயங்கள் பற்பலவுள்ளன. தேவாலயமென்பது தெய்வம் வீற்றிருக்கும் கோயில். தெய்வம் அங்கிங்கெனாதபடி

எதும் வியாபியாய் நிறைந்து நிற்கும் பரமாத்மா வாதலால், அத்தெய்வத்தினை, ஏகதேசியாகக்கண்டு வழிபாடு செய்தல் யாதுக்கென்பர்சிலர்; அவர் அறியார்; ஏகதேசசரீரத்தில் வசிக்கும் ஜீவாத்மாக்களாகிய மானிடர் ஏகதேச அறிவும், ஏகதேசவியாபாரமும் உடையராதலால், பிரமப்பொருளாகிய தெய்வம் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்து நிற்கும், அந்நிலையின் உண்மையை உள்ளபடி அறிந்து வியாபக அறிவு வழிபாடு செய்தல் அம்மாந்தர்க்கு இயல்பான சுலபகாரியமாகமாட்டாது. ஆதலால், அத்தபிரமத்தெய்வ வழிபாட்டினைச்செய்யும் ஞானவலியினைக் கிரமமாகவே அவரவர்களும் அடைதற்குரிய சௌபதே முறையாம். இந்த முறை, சுருதி, யுக்தி, அனுபவம், மூன்றிற்கும், முழுவும் எற்கும் முறைமையேயாம்.

இவற்றுள் இத்தென்னாடானது, சிதம்பரம், சீர்காழி, புள்ளிருக்கும்வேளூர், மாயூரம், திருவுத்தரகோசமங்கை, திருவிராமேச்சுரம் முதலிய அநேகதிவ்ய வைதிக சைவ ஸ்தலங்களைத் தன்னிடத்துப் பொருந்தக் கொண்டிருத்தலானும்; ஆளுடைய பிள்ளையார் முதலிய சைவபரமாசாரிய சுவாமிகள், நால்வரும், மற்றும் பல நாயன்மார்களும், திருவவதாரஞ் செய்து, பரமேச்சுவரன் திருவருட்பிரசாதம் நிலையிட்டு விளக்கி அனுக்கிரகஞ் செய்தற்குரிய சிறத்தலானும், மற்றை நாடுகளைக் காட்டினும், மிகமேலாய் விளக்கமுறுவதொருநன்னாடாம்,

இந்நன்னாட்டில், புண்ணிய தீர்த்தங்கள் அநேகம் அமைந்ததாயும், வேதபாராயணஞ்செய்கின்ற சற்பிராமணர்களும், வேதாகமசாஸ்திரங்களில் வல்ல ஆதி சைவர்களும், தமிழ்வேதபாராயணஞ் செய்கின்ற தேசிகர்களும், ஆரிய திராவிட ஆங்கிலேய பாஷைகளில் வல்லவர்களாகிய வித்வசிரோமணிகளும் கலத்தின்கண் வழுவாத நடைமாயிற் குடிநாட்பண்விலக்கின்மனையொழுக்கத்தின் மேதக்க நிலையுடைய சைவவேளாளர்களும், அநேக இரத்தினறுதிகள் முதலிய பற்பல வியாபாரஞ் செய்கின்றவணிகர்களும், விக்கிரகங்களைச்செய்யக்கூடியவிசுவகன்மகுலத்தினர்களும், சங்கீதமேளவாத்தியங்கள் வாசிப்பதில் தேர்ந்த வித்வான்களும், ஆடலபாடலுக்குறிய பணிப்பெண்களும், இன்னும் அநேகர்களும், வசிக்கின்ற ஒவ்வொரு மகாவீதிகளும தென்னை, கமுகு வாழைகளானும், மிகஅலங்காரங்களமைந்த இந்த க்ஷேத்திரமானது, கற்பகால ஆதியில், சந்தனம, அகில், குக்கில், வேங்கை, அசோகு, தென்னை, மா, முதலிய அநேக விருக்ஷங்களானும், மல்லிகை, முல்லை, செண்பகம், முதலிய வாசனை மலர்கள் அமைந்த இன்னும் அநேக செடிகளானும் நிறைபெற்ற ஆரண்யமாயுள்ளது.

சிவபெருமானுடைய கிருபையினால் விஷ்ணுமூர்த்தியின் உந்திக்கமலத்தில் பிரமதேவன் தோன்றி, அவரை நோக்கி நமஸ்கரித்து எழுந்துநின்று என்னை யுண்டுபண்ணினது என்னகாரணமென்று வினவ; அவர் அதற்கிரங்கி, நாமும், நீரும் வணங்குதற்குரிய மூன்று நேத்திரங்களையுடைய மின்னார் செஞ்சடை அண்ணலை குறித்து அருந்தவம்புரிந்து, சிருஷ்டித்தொழில்தனைச்செய்வதற்கு; அனுக்கிரகம் பெறுவாய் என்று திருவாக்களித்தார். அவ்வுத்தரவைப்பெற்று அகசந்தோஷமுடையவராய் எவ்விடம் அவ்வுத்தவம் புரிதற்கு இசைந்ததென யோசிப்பாராயினர், அப்போது உண்டாகிய அசரீரி திருவாக்கின்படி பொன்னிநதியில் ஸ்நானம் பண்ணி நித்யகடன்களை முடித்துக்கொண்டு மேற்கூறிய ஆரண்யத்துள், பரிசுத்தமான இடத்தின்மேல் சுகாசனத்திலிருந்து. நேராகிய கழுத்துத்தலை உடம்புகளை உடையவராய்; அத்தியாச்சிரமத்தராய், இந்திரியங்கள் அனைத்தையும் அடக்கி, பத்தியால், இருதயபுண்டரீகத்தைத்துகளறச்சுத்தஞ்செய்து, அதன்மத்தியிலே, தெளிவுடையவராய் சோகமில்லாதவராய் எண்ணப்படாதவராய் வெளிப்படாதவராய், அநந்தரூபராய், சிவனாய், அமிர்தராய். பிரமயோனியாய், தற்பரமாய், ஆதிமத்தியாந்த விகீனராய், ஏகராய், விபுவாய், சிதாநந்தரூபியாய், அரூபராய், அற்புதராய், உமாசகாயராய். பரமேசுவரராய் பிரபுவாய், முக்கண்ணராய், நீலகண்டராய், பிரசாந்தராய். பூதயோனியாய், சமஸ்த சாக்ஷியாய், இருப்பவரைத்தியானித்து. வெய்யில், மழை, பனி. ஒன்றுந்தோன்றாதவராய், பல்லாயிரவருடம் தவமியற்றுவாராயினர்.

அத்தவத்திற்கிரங்கி கெங்கையும், மூன்றாம்பிறைச்சந்திரனையும், தரித்தபொன்மயமான சடையையுடையவராய், நம்பெருமான் அம்பிகைசமேதராய்; நந்திதேவர் முதலிய முப்பத்துமுக்கோடி தேவர்களும், முன்னும்பின்னும், சூழ்ந்துவர அநேகவாத்தியங்கள்முழங்க தெரிசனங் கொடுத்தருளினர். பிரமதேவரானவர், திடுக்கிட்டு, நடுடுங்கி தவத்தை விட்டெழுந்து அஷ்டாங்க நமஸ்காரம்புரிந்து, சிரமீது குவித்தகையுடையவராய், அநேக பிரதக்கணஞ் செய்து சந்நிதானத்தில் நின்று, விரிகடலுலகின் விளைவே, அருமையிலெளிய அழகே, கருமுகிலாகிய கண்ணே, என்று பற்பலவிதமாய்த்தோத்திரம் பண்ணினர்.

கடவுளானவர்; பிரமதேவனை சமீபத்திலழைத்து, தம் திருக்கரங்களால் தடவிக்கொடுத்து, உமக்கு யாதுவேண்டுமென வினவினர்; எம்பெருமானே கிருபைபாலித்து சிருஷ்டித்தொழிலதனைச்செய்யும்படி உத்தரவளிக்கவேண்டுமெனப்பிரார்த்தித்தனர். அதற்கிரங்கி இவ்விடத்திலுள்ள (பா) விருக்ஷத்தின் கீழ்ப், சகல [illegible]கள திருமேனியாயும் சுயம்புவாயுமுள்ள சிவலிங்கத்திருவு

ருவை இதன் தென்பக்கலில் ஓர் தீர்த்தம் உண்டுபண்ணி அதில் விதிப்படி ஸ்நானஞ்செய்து, பூசைபுரிந்து நீர்வேண்டிய வரங்களையடையக்கடவதென்றும், இந்த க்ஷேத்திரமும், தீர்த்தமும், இலிங்கமும், உம்முடைய பெயரினால் விளங்கக்கடவதென்றும் இவ்வாரண்யம் நன்னாட்கி பொன்மயமான மாளிகையாய்ப்பார்க்கக்கடவீரென்றும, திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

பிரமதேவனானவர், அவ்விதம்தீர்த்தம் ஏற்படுத்தி, விதிப்படி ஸ்நானஞ்செய்து அநேகநாள் சிவலிங்கப் பெருமானை அபிஷேக அலங்கார நைவேத்திய தூபதீப ஆராதனைபுரிந்து பற்பல தோத்திரஞ்செய்வாராயினர். அவ்விதஞ்செய்கின்றதற்கு, கபாலமூர்த்தியாகிய கடவுள் கிருபாநோக்கமாய் இடபாரூடராய்த்தோன்ற பிரமதேவனானவர், பலமுறை நமஸ்கரித்தது சிரமீது குவித்தகையுடையவராய் நின்று ஐயனே, அடியேனுக்கு முன் கட்டளையிட்டவண்ணம் சிருஷ்டித்தொழிலதனை செய்யும்படி உத்தரவாக வேண்டுமெனப்பிரார்த்தித்தனர். கடவுளானவர் அவ்விதம் அனுக்கிரகம் புரிந்தும இவ்வாரண்யம் பிரமபுரமென்றும், இத்தீர்த்தம்பிரமதீர்த்தமென்றும், இச்சிவலிங்கம் பிரமபுரீஸ்வரரென்றும், எக்காலமும் வழங்கும்படி கட்டளையிட்டு அவ்விலிங்கத்தின் கண்ணமாந்தருளினர். பிரமதேவனானவர் அவ்வருமையானவரங்களைப்பெற்று முன் கற்பங்களில் சிருஷ்டித்தொழில் எவ்விதம் நடந்தேறியிருக்கின்றதோ, அவ்விதமே செய்யத்தொடங்கியாவற்றையும், தம் ஒருவரால் நடத்த முடியாதென்ற எண்ண முடையவராய், மனோசங்கற்பத்தினால், பிருகு, புலத்தியன், புலகன், தக்கன், முதலிய ஒன்பது புதல்வர்களைப்பெற்று அவர்களையும அத்தொழிலை நடத்தும்படி செய்தனர்; அதில் தக்கன் நற்றவங்களைச்செய்து அநேக புத்திரர்களையடைந்து அவர்களையும் அத்தொழிலதனை நடத்தும படி பணித்தனன். இவ்விதம் சிருஷ்டித்தொழில் நடந்துவருகின்ற காலத்தில்; தக்கனுடைய பிள்ளைகட்கும், நாரதமகரிஷிக்கும், உண்டாகிய நட்பினால் அந்நாரதமகரிஷி அப்பிள்ளைகளைப்பார்த்து நீங்கள் செய்து வருகின்ற தொழிலானது பந்தத்தின் மேல் பந்தத்தை விளைவிப்பதேயன்றி என்ன சுகத்தையடைவீர்களென்று இகழ்ந்து பேசினார். அப்பிள்ளைகள் வேறு நாங்கள் யாது செயக்கடவதென்று விசாரித்தனர். நீங்கள் பிரமபுரமாகிய ஆரண்யத்தையடைந்து அங்குள்ள பிரமதீர்த்தத்தில் விதிப்படிஸ்நானம்பண்ணி பிரமபுரீஸ்வரரைப்பூசை செயக்கடவதென்று ஆஞ்ஞாபித்தனர். அப்பிள்ளைகள் அவ்விதமே செய்ததனால் மோட்சமடைந்தனர்கள். தக்கன் மக்களுடைய பிரிவாற்றாமையால் மனம் நொந்து நாரதமகரிஷியோடு பற்பல வார்த்தைகள் கூறி இருவர்களுங் கொடுஞ்சாபமிட்டுக்கொண்டார்கள். அதன் பின் தக்கன் அதிக மாதவஞ்

செய்து அநேக புத்திரிகளைப் பெற்றதோடு இவ்வுலகமெல்லாமீன்ற அன்னையாகிய இமோற்பர்வத இராசகுமாரியையும் மகவாகப்பெற்று, எல்லாம் வல்ல இயர்க்கைக் கடவுளின் சரபேழும் தன் கரம் மேலுமாகக் கன்னிகாதானம் செய்வித்தலாகிய பெரும் பாக்கியத்தையும் அடைந்தான். அவ்விதம் அடைந்த செருக்கினால் யாவர்களையும் மதியாது தாம் மனம்போனவாறு நடந்து கொண்டிருக்குங்காலத்தில், இன்றொரு மகாயாகஞ் செய்ய எண்ணி, ஆரண்யமாயிருந்த திருச்செம்பொன் பள்ளியின் சார்பிலுள்ளத் திருப்பறியலில், யாக குண்ட மண்டல வேதிகைகளும், மற்றும் அதற்குவேண்டிய பாகசாலை, வந்தவர்கள் தங்குதற்குரிய விசாலமான பற்பல விடங்களும் அமைக்கும்படிச் செய்வித்து பிரமன், விஷ்ணு, இந்திரன், முதலாகிய தேவர்களிருக்குமிடங்கட்குத்தாம் நேரில் சென்று தன்னால் செய்யும்மகாயாகத்தை நிறைவேற்றிவைக்கும்படி வினய விண்ணப்பஞ்செய்து விடைபெற்றுக்கொண்டு தம் முக்கிய மருமகனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற கைலாசகிரியில் முறைப்படி நந்தி தேவரிடத்திலறியாது உள்ளே புகுந்தனன். அந்தச்சமயம், ஐயனும், அம்மையும், ஒருவர்க்கொருவர் அன்புகாட்டியிருக்கின்ற நேரமாதலால், இவர் வரவை நோக்காதவர்களானார்கள். அதனால் தக்கன், மருமகனாகிய மாதேவன் தம்மைக் கண்டெழுந்திருந்து அஞ்சலி முதலானதுஞ் செய்யவில்லை என்ற கோபத்தினால் வந்தகாரியமொன்றுந்தெரியாது, எல்லாமென்மகளினால் வந்த வாழ்வல்லவோ வென்று பற்பல இழிவான வார்த்தைகள் கூறி தமதிடஞ்சென்று எண்ணிய வண்ணம் மகாயாகஞ்செய்யமுயன்றனன். நீலகண்டனை விரிசடைக்கடவுள், தம்மையும் உலகிலுள்ள சாமான்யமானுடரைப்போலெண்ணி தெரியாது வந்தகுற்றத்திற்காக, புன்முறுவல்செய்து, இவன் பூமியில் தெய்வீகராஜனென்னும் மானுடனாய்ப் பிறக்கும்படி சபித்தனர். அம்மையானவள் விதிர் விதிர்த்து சிம்மாசனத்தினின்று கீழேகுதித்து பஞ்சாங்க நமஸ்காரம்பண்ணி ஐயனே அரசே, ஆனந்தக்கனியே, என்றுபற்பல தோத்திரஞ்செய்து என் தகப்பன் என்னிடத்துள்ள அன்புமுதிர்ச்சியினாலொன்றுந்தோன்றாமல், முன்னர் அறியாது வந்தகுற்றத்திற்காக இவ்விதம கட்டளையிட்டால் நான் என் செயக்கடவேனென்று தம்மைத்தாமே நொந்து அன் புறுவாளாயினள். கடவுளானவர் கோபக் குறிப்பினால் பின் நடக்குந்திரு விளையாட்டுக்குத்தக்க வண்ணம் தேவையே, எனக்கூறி நாம சொன்னவுரை மாறாது, நீபிரார்த்தித்துக்கொள்ளுவதினால் இவன் கன்னியர்களுடைய கர்ப்பத்தில் தோன்றாது அனலிடைத்தோன்றி அளவில்லாத வளப்பங்களையுடையவனாய்ச் சில நாட்கழித்து இங்குசெல்வானெனப்புகன்றார்.

அவ்வரங்களைப்பெற்று, ஏ, சுவாமின் என் தகப்பன் செய்
கின்றயாக சாலைக்குச்சென்று அவர்கட்கு, நற்புத்தி புகட்டி தங்
களை அழைத்து வரச்செய்யக்கடவேனென்று பலமுறைத்தோத்
திரித்தாள்; பசுபதியானவர் நீ அங்கு செல்வாயாகில் எவ்விதத்தா
லும் மதிக்கமாட்டானென பல காரணங்களால் போதித்தனர்; பரா
சத்தியானவள் மனஞ்சகியாமல் அங்கு செல்லவேண்டிய குறி
ப்பையறப்பல விதமாய்க் காட்டினள் அக்குறிப்பை நோக்கிச்
சென்று வரும்படி திருவாக்களித்தனர்.

உலக காரணியானவள் இரண்டு திருப்பாதங்களும் நோகும்
படி ஒருவிதத்துணையுமில்லாமல், அரி, பிரமன முதலியமுப்பத்து
முக்கோடி தேவர்களும், மற்றும் யாவர்களும், நெருங்கியயாக
சாலையைச்சார்ந்தனள். பராசத்தியைக்கண்டு ஆங்குள்ள தேவ
ர்களெல்லாம் நடுக்கமுற்று உபசாரங்கள் சொல்ல பெரும்பாதக
னும் பெற்றோன் அன்பு பாராட்டி ஒருவித உபசாரமுஞ்சொல்லாத
வனைப் பழித்துக்கண் மூடாத பாமஞானியைப்போல வேடங்காட்டி
யிருந்தனன் உமாதேவியானவளையும் சகித்து தகப்பனுக்குச்செய்ய
வேண்டிய மரியாதையைச் செய்து, செங்கண்ணுக்கன்தோ
ன்றுமல் நடத்துகின்ற காரியங்களைக்குறித்து மனம் நொந்து
இகழ்ந்து பேசி பரமேட்டியானவள், துன்பசாகரத்திலமுந்தி
ஒன்றுந்தோன்றாது நிற்கின்ற போது அவ்வாரண்யத்துள்; ஓர்
புட்பச்செடியின் மீதிருந்த மகா அழகுவாய்ந்த மயிலானது அம்
பாளுடைய கூந்தலைப்பார்த்து தம்மின மென்று கருதி, சிறகு
களை விரித்துக்கொக்கரித்து சேர வடைந்து அபயமபயமென்று கூறி
அம்பிகையினுடைய திருவடியின் கண் வீழ்ந்தது அருமையான
வள் தம் கரங்களால் தடவிக்கொடுத்து அஞ்சலை என்று திரு
வாய்களித்து பாதகனுடைய தக்கன் செய்த கொடுமையை எண்ணி
அவனைப் பார்த்து, நீ, வளர்த்த ஸ்தூலசரீரத்தை, இவ்வியாகசா
லையில் நீருக்கவுடனாக சாலைப்பெய்வாழுந்தடையாக்குகின்றே
னென்று சொல்லி யோகாக்கினியை யுண்டுபண்ணி நாம் சொ
ல்லிய வண்ணம் முடித்தனள். பிரமன், அரி, இந்திரன், முதலா
கிய தேவர்கள் எல்லாரும் நடுக்கமுற்று இனி யாதுவினையுமோ
வென அச்சமடைந்து பெருந்துன்பக்கடலில் அழுந்தினார்கள்
இதைப்பார்த்த நாரதமகரிஷியானவர் கையிலிருந்த வீணை கழு
வினதுந்தெரியாமல் சடையை விரித்துக்கொண்டு கைலயங்கிரியி
லுள்ள கபாலமூர்த்தியின் சந்நிதானத்தில் சென்று அலறியழுது
இங்கே நடந்த வைபவங்களையறிவிக்க, அவைகளைக் கேட்டவு
டன் கோபாவேசமுண்டாகி, தன் திருச்சடையிலொன்றையெடு
த்தெறிந்தனர். அதினின்றும் அகோரவீரபத்திரர்தோ
ன்றி ஐயனே, என்னையுண்டுபண்ணிய காரணம் யாதென்று
கேட்க; திருச்செம்பொன்பள்ளியின் சார்பில தக்கன் செய்கின்ற

யாகத்தையும், அங்குள்ளவர்களையும் அழித்துவரக்கடவ
தென்று கட்டளையிட்டனர். சுயம்பிரகாசபரமபிதாவே அடி
யேன் சென்று அக்கட்டளையின்படியே செய்து வருகின்றே
னென விடைபெற்றுக்கொண்டு அநேக கோடி ரூபமுடையவராய்
அக்கினிப்பொறிகள் சிதறும் வண்ணம் அந்தயாகசாலைக்குச்
சமீபத்தில் வந்து நான்கு வாயில்களுக்கும் காவல்கள் வைத்து
உள்ளேசென்று தக்கனை நோக்கி நமக்காகிலும் கொஞ்சம்
அவிர்பாகங் கொடுப்பீரோவென்று பரிகாசம் பண்ணினர்.
பின் விளைவு தெரியாத தக்கன் அக்காலத்திலும் சூலபாணியாகிய
கடவுளைப்பலவாறு நிந்தித்தான். அந்நிந்தனையைக்கேட்டுப் பெரு
நகைசெய்து, யாகசாலையையும், அங்குள்ளவர்களையும் தாமெண்
ணியபடி முடித்து கைலயங்கிரிக்கருணைக்கடலாகிய அண்ணலா
ராத்தியானம் பண்ணுவாராயினர். அவ்வண்ணலார், இடபவா
கனத்தின் மீது பற்பல விருதுகள் முன்செல மேளவாத்தியங்
கள் முழங்க, யாகசாலையின்கண்ணெழுந்தருளினர். அகோரவீர
பத்திரர், சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அஞ்சலி செய்துகொ
ண்டு நிற்பாராயினர். அவ்விடத்தில் நடந்திருக்கும் ஆச்சரியங்
களைக்கண்டு மனம்சகியாது இவ்விடத்திறந்தவர்களையும்
எழுப்புகவென்று கட்டளையிட்டனர். அவ்வண்ணமாகயாவர்
களுமெழும்புகவென்று திருவாக்களித்தார், சிவபிரான் புதல்வர்
புரந்தரன்மால், அயன்முதலியதேவர்களும் மற்றும் யாவர்
களும், நித்திரைவிட்டெழுபவர் போலெழுந்து மனமயக்கத்தி
னால் வாழ்வு கெட்டோமென நினைந்து சரீரமெல்லாம் வியர்
த்து நடுநடுங்கி மனம்வெதும்பி கண்களில் நீர்ததும்பி சிரமீது
கைகுவித்தவர்களாய் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் புரிந்தவர்க
ளாக இருந்தார்கள். எவர்களாகிலும் சிரசின்கண் கைகுவிப்பார்
களாயின் அவர்களை ஓங்குவிப்பாராகிய செல்வரானவர் அவர்
கள் குறிப்பையறிந்து யாவர்களுமெழுந்திருங்களென்று திரு
வாய்மலர்ந்து மேற்சொன்ன தேவர்களை நோக்கி இந்தயாகத்தில்
நமக்கு இப்போதாகிலும் அவிர்ப்பாகங் கொடுப்பீர்களோ வென்று
கேட்டருளினர், அவர்கள்,

"அடியரேமெந்த ஞான்று மாணவமலக்கோட்பட்டுக்
குடிகெடுக்கின்றோமேயிங் குரங்கு போலாட்டு விப்பாய்
செடியுடலேழையெங்கள் செப்பினைப் பொறுத்தாட்கொள்ளும்
படியிரந்திரந்து விண்ணப்பம் செய்வோம் பிறிதென்செய்வோம்"

என்று இன்னும் அநேகதோத்திரங்கள் செய்து அடியெங்கள்
திருப்பாற்கடல கடைந்தபோது உண்டாகியவிஷத்தை அமிர்த
மாகக்கொண்டு இரட்சித்ததுபோல் இக்காலத்திலும் காப்பாற்ற
வேண்டுமென்றுபிரார்த்தித்தார்கள். அதற்கிரங்கி, திருச்செம்பொ

ஸ்பள்ளி, களிப்பள்ளி, திருப்பதியனூர். க்ஷேத்திரங்களில், பற்பலவழிபாடுசெய்து விதிப்படி பூசைபுரிந்து அக்குற்றத்தை நிவர்த்தித்துக் கொள்ளுங்களென்று திருவாக்களித்து, சூக்கும சரீரத்தோடு சமீபத்தில் நிற்கின்ற சௌரீயை நோக்கி இந்தயாக சாலையில், நீ, அதிஅன்பமாயிருக்கின்றபோது மயிலானது உன்னை சாருதலியடைந்தமையால், நீயும், அம்மயில் வடிவாகி நாமெழு ந்தருளியிருக்கின்றபிரமபுரமாகிய ஆரண்யத்தில் சென்று நம்மை அர்ச்சிப்பாயாயின் நாமும் மயிலாகி உன்னையாதரித்து வருகி ன்றோம் சிலநாளாயபின் முன்போல் நம்மையடைவாயென்று ஆக் ஞாபித்தருளினர். அத்திருவாக்கைக்கேட்டு நல்லறம் வளர்த்த செல்வியானவள் எல்லாவுலகங்களையும்மூடுதற்குரியகலாபங்களையும் பொற்சிமிழைபோன்ற பைந்தாள் முதலிய பெரிய அழகுவாய்ந்த மயிலுருக்கொண்டனள்; அதைக்கண்ட சேடியர்களும் அவ்வுரு வடைந்தனர்கள். இவ்வற்புதத்தைத் தரிசித்த இலக்குமி, சரஸ்வதி இந்திராணி, முதலிய மற்றுமுள்ள தேவதாஸ்திரீகளும் இவ்வருமையான திருவுருவெடுத்துக்கொண்டுபிரமபுரமாகிய ஆர ண்யத்தில் உலாவிசஞ்சரித்தார்கள்; இவர்கட்கு எவ்வித இடையூ றும் வாராமல் ஆதித்தனமுதலிய தேவர்கள் பாதுகாப்பாராயி னார்கள்.

இம்மயில்கள் கூட்டத்தோடு கண்ணாடிபோன்ற பொன்மய[illegible] கலாபங்களை விரித்து விளையாடிக்கொண்டிருப்பதைசர்வ[illegible]மக் களின்,

"மாயைதனையுதறி வல்வினையைச் சுட்டு மலஞ்
சாயவமுக்கியருடா னெடுத்து—நேயத்தால்
ஆனந்தவாரிதியிலான் மாவைத்தானழுத்த,

நடனஞ்செய்தருளுகின்ற எம்பெருமான் தாமும் பெரிய அழகு வாய்ந்த ஆண்மயிலுருவமைந்து அத்தனும், அம்மையும் ஆனந் தத்திருநடனமாடினார்கள். அத்திருநடனம் யாதுக்கெனின்.

"அந்தணன்கடமே தென்னிலங்தொழில் நடத்தலாகும்
பந்தமதகற்று மிந்தப்படி அழுமிதுவேயாகும்
வந்துலகத்தின் யாருங்காண் பரசேல் வழுவாமுத்தி
தந்தருளிக்குந்தெய் வத்தலமுமித்தல மேயாகும்; அன்றியும்"

இருவகைவினை கடந்த வியல்புநம் மௌனியாஞான
வுருவமானந்த மானவுயிரியாம் பெயமெமக்குப்
பருதக பாமஞானம் பாற்பாயிலது காத்த
நிருமலியிச்சை செய்து இதிகழ்நடமாகு மன்றே.

என்ற வாக்கியத்தின் வண்ணம் திருநடன மாடவும், சிற்சிலமயில் கள் கலாபங்களை விரித்துக்கொண்டு நிற்கின்றதையும், சிற்சில

மயில்கள், உல்லாசமாய் நடப்பதையும், சிற்சிலமயில்கள் ஆங்குள்ள செடிகளில் ஏறி இறங்குவதையும், தெரிசிக்குந்தேவர்களும் மற்றும் யாவர்களும் அடையுமானந்தத்தை, எம்போன்றவரால் சொல்லற்பாற்றன்று? அஃதாவது,

"புளிக்கண்டவர்க்குப்புனலூறு மாபோற்
களிக்குந்திருக்கூத்துக் கண்டவர்க்கெல்லாந்
துளிக்குங்கண்ணீருடன் சோரு நெஞ்சத்திரு
ளொளிக்கு மானந்த வமுதூறு முள்ளத்தே."

"இனைத்தனையுள்ள தோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங்காண் டொறும் பேசுந்தொறு மெப் போதும்
மனைத்தெலும் புண்ணெகவானந்தத்தேன் சொரியுங்
குனிப்புடையானுக்கே சென்றூதாய்க் கோத்தும்பீ,"

என்னும் தமிழ்வேத வாக்கியத்தாலுமறிக, இவ்விதம் அநேகநாள் திருநடனஞ் செய்துகொண்டிருக்கின்றபோது, ஒருநாள் திருமயிலாகிய தாயினுடைய திருச்செவியில் கேட்கும்படி இங்குள்ள தீர்த்தத்தில் படிந்து சிவலிங்கத்திருவுருவை பூசனைபுரிவாய் என்று அசரீரித்திருவாக்குண்டாயிற்று; அது கேட்டவுடன் அகிலலோக நாயகியானவள் நம்பெருமானைப் பூசிப்பதற்குரிய, ஜலம், பூ, நைவேத்தியம், தூபம், தீபம், முதலாகிய ஆராதனை செய்வதற்கு சரீர அங்கங்கள் நமக்கு இல்லையே என்று துன்பமுற்று, ஒருவாறு தேறி, மனதால் மேற் சொன்ன அபிஷேக நைவேத்தியங்களை செய்து, அப, (மா) விருக்ஷத்திலேறி கொழுந்துகளைக் கொய்து, பெருமானுடைய திருமேனியில் சுவர்ண பீதாம்பரமுடுத்துவதுபோல் அழகுபெற அடுக்கடுக்காய்ச்சாற்றி அவ்வாரண்யத்திலுள்ள வாசனை தங்கியமலர்களையும், வில்வங்களையும் தூவி இன்னும் பற்பல மயில்களும், கொணர்ந்து முன்னூற்றறுபது வருடம் வரையில் அன்னபூரணியானவள், ஒழிவற நிறைந்தயோகமூர்த்தியின் திருமேனிமுழுவதும்தெரியா வண்ணம் அர்ச்சித்து மயில் கூட்டங்களோடு பிரதக்ஷணஞ்செய்து வருவாளாயினாள் அதன்பின் ஆண்மயிலுருவமைந்த, பிறைக்கொழுந்தணிப்பெருமான் அம்மயிலுருவம் மறைந்துவிட மயிலம்மையானவள் மனஞ்சலியாது அர்ச்சித்ததில் யாதுகுற்றமுளதோவென்றும் முன்பாதகனான தக்கன் செய்தகொடுமையையெண்ணியும், பதியன்னை விட்டுப்பிரிந்ததை யோசித்தும் பலவிதத்துன்பப்பட்டு முன்போல் பிரமதீர்த்தத்தில்படிந்து பூசை செய்வாளாயினாள். அக்காலையில் பிரமபுரீஸ்வரரானவர் இடபாரூடராய்த்தோன்ற அம்மையானவள் தரிசித்து மனசினால் பற்பலஸ்தோத்திரம்செய்யகிருபாநோக்கமுடையவராய் அதுவரையில் நடத்திவந்த

பூசைக்குகந்து; தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி இம்மயிலுருவை நீக்கி எதார்த்தமாகிய திருவுருவத்தையடைந்து வாக்கடவதென்று ஆக்ஞாபித்தனர். அவ்விதமநடத்தி எதார்த்ததிருவுருவத்தையடைந்து நமஸ்காரம்புரிந்து தமக்கு வேண்டும் வரங்களை அனுக்கிரகஞ்செய்தருளவேண்டுமெனப்பிரார்த்திப்பாளாயினள். அந்தசமயத்தில் தேவர்கள் எல்லோரும் அரகரவென்று முழக்கொலி செய்து புஷ்பங்களை மாரியாக வருஷித்தார்கள்.

"ஐயனே போற்றி போற்றி யழலவிர் மழுமானேந்தும்
கையனே போற்றி போற்றி மையாகண் காணுமேனிச்
செய்யனே போற்றி போற்றி தேவரை காத்தகண்ட
மையனே போற்றி போற்றி யென்றுமது வருக்கலுற்றாள்"

இவ்விதமாகப்பற்பல தோத்திரஞ்செய்து இக்ஷேத்திரம் இன்றுமுதல் எக்காலமும், பிரமன், விஷ்ணு முதலாகிய தேவர்களும், மற்றுமயாவர்களும் கௌரிமாயூரமென்றுவழங்கும்படிக்கும், தாங்களும் மாயூரேசரென்ற திருநாமமுடைய வராயும் யாவர்களாயிருப்பினும் இங்குள்ள புண்ணியதீர்த்தங்களில் விதிப்படி ஸ்நானஞ்செய்து இங்கெதிரிசனஞ்செய்பவர்கட்குப்பஞ்சமகாபாதகமுதலிய எவ்வகைக்குற்றங்களையும் நீக்கி, இம்மையில், யார்; யார்; எதைவேண்டினும் அவற்றையளித்தும் மறுமையில் மோக்ஷசுபத்தைக்கொடுத்தும் இவ்வுலகில் ஒவ்வொருவருடங்களிலும் சூரியன் துலாராசியில் வசிக்கின்ற ஐப்பசிமாதத்தில், பொன்னி நதியில் இடபதேவர் எழுந்தருளியதீர்த்தக்கட்டத்தில் ஸ்நானஞ்செய்து நம்மை தெரிசனம் பண்ணுகின்றவர்கட்கு இடபாரூடராய்க்காக்ஷி கொடுத்து தீர்த்த மகோற்சவம் கொண்டருளும்படிக்கும் இன்னும் அநேக வரங்களையும், கட்டளையிட்டருளவேண்டுமெனப்பிரார்த்தித்தனள், அந்த க்ஷேத்திரத்தில் வசித்திருந்த மற்றமயில்களெல்லாம், அத்தீர்த்தத்தில படிந்து எதார்த்தவுருவத்தையடைந்து பெருமானடியின்கண் பணிந்து அவரவர்கள் இருக்குமிடஞ்சென்றனர்கள்.

அந்த சுயம் பிரகாச சொரூபியானவர் உமாதேவியார் கேட்டவரங்களையெல்லாம் மிகசந்தோஷமாய்க் கொடுத்து அவ்விலிங்கத்தின்கண் ணமர்ந்தருளினார்.

அக்காலத்தில் முன் தக்கனது வேள்வியில்; அகோரவீரபத்திர கடவுளால் அநேக இம்சைகளடைந்து முன் சொன்ன திருப்பறியலூர் முதலிய ஆறு க்ஷேத்திரங்களிலும், விதிப்படி ஆராதனை செய்து இக்கௌரிமாயூரத்தை யடைந்து ஞானமூர்த்தியை அபிஷேக அலங்காரதூப, தீபநைவேத்தியம ஆராதனை பண்ணி, அர்ச்சனை புரிந்து, அஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து எல்

கள் குற்றங்களை நீக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்,
அன்னுளோர் பிரானும் மனமிரங்கி அவ்விதம் அநுக்கிரகஞ்
புரிந்தமையால், மாயூரநாதவள்ளலென்னும் பெயருண்டாயிற்று.

சராசரங்கட்கெல்லாம் அன்னையாகிய உமாமகேஸ்வரியான
வள் இம்மாயூரநாதவள்ளலாரை ஆகமங்களில் விதித்தவண்ணம்;
பூசைபுரிவதற்கு அதிக அன்புகொண்டு பிரமதீர்த்தத்தில் சேடி
யர்களோடு விதிப்படி ஸ்நானம் பண்ணி விபூதி உத்தூளனஞ்
செய்து உருத்திராக்கமணிந்து நித்திய கடன்களை முடித்து நந்த
வனத்திற் சென்று, தன்பெருமை வாய்ந்தகரங்களாலும் சேடி
யர்களாலும், - நந்தியாவட்டம், கோங்கு, மந்தாரை, மாதுளை
வில்வம்; கொன்றை, நீர்முளரி, செவ்வகத்தி, பன்னீர், ரோஜா,
மருக்கொழுந்து, அறுகு, மல்லிகை, முல்லை, புன்னாகம், பாரி
சாதம், அலரி, முதலிய அநேகவிதமான புட்பங்களைக் கொணர்
ந்து, அலங்காரம் பண்ணுவதற்குரிய பணிகளாக அமைப்பதற்கும
பலவகை நைவேத்தியங்களைப் பாகம் பண்ணுதற்கும், வாசனை
தங்கிய சந்தனஞ் சேர்ப்பதற்கும், பற்பல கனிகளின் இரசங்களை
ப்பிழிதற்கும், சூரியன் உதயப்பதற்குமுன், பரிசுத்தமான நன்னீர்
கொணர்ந்து புஷ்ப தீர்த்தத்தில் வடிகட்டி அதிற்கற்பூரப்பொடி
முதலிய வாசனைத்திரவியங்களை போடும்படிக்கும் சிற்சிலர்கட்குக்
கட்டளையிட்டு இன்னும் அதற்கு வேண்டிய அபிடேகத்திரவியங்
கள், பரிவட்டங்கள் உபசாரசாமான்கள், யாவற்றையும், ஓரிடத்தில்
சேகரித்து வைத்துக்கொண்டு உச்சிகாலத்தில், பூசை
புரிவதற்காக முன்போல ஸ்நானம் பண்ணி வந்து மாயூரநாத
வள்ளலார் எழுந்தருளியிருக்கு மிடத்தில் சென்று அநு
க்ஞை விக்னேசுரபூஜை புரிந்து புண்ணியாக வாசனஞ்
செய்து இவ்வுலகங்களெல்லாம் வாழும் பொருட்டு, சவ்வி
யபூசை, நகலசஸ்தாபனம், அக்கினிகாரியம், விக்கினே
சுர பூசை துவாரவாரணவரைப் பிரார்த்தித்தல் முதலிய
வைகளை மனசினுள் செய்து கர்ப்பகிரகத்தில் புகுந்து, ஸ்நான
சுத்தி, திரவியசுத்தி, மனச்சுத்தி, பூதசுத்தி, இலிங்கசுத்தி,
விருப்புடன் புரிந்து, அர்க்கியம், பாத்தியம், ஆசமனீயம் ஸ்தா
பித்து முக்கிய ஆதாரசத்தி, முதற்சத்தி, மண்டலம் வரையில்
பூசித்து, உளவத்தங்கள் ஆவாகனஸ்தாபனஞ்செய்து எட்டங்கு
லத்தில் நியாசம் புரிந்து, சந்நிதானம், சந்நிரோதனம், திக்குபந்தனம்,
அவகுண்டனம், சானத்தலைய மேனுமுத்திரையையுங்கொடுத்து,
பாத்தியம் அர்க்கியம், ஆசமனீயம் நல்கி, அநேக வாத்தியங்கள்
முழங்க, தயிலம், மா, நெல்லி, திரவியம், பஞ்சகௌவியம், பஞ்சா
மிர்தம், பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, கனிவர்க்கங்களின்
இரசங்கள், கருப்பின் ரசம், இளநீர், அன்னம், சுகந்தரசம்,
சந்தனம், பன்னீர், சகஸ்ரதாரை, சிருங்கம், வலம்புரிச்சங்கம்,

முதலிய இன்னும் அநேக திரவியங்களாலும், முறைமைப்படி அபிஷேகித்து இடைக்கிடைநறு நீராட்டி நைவேத்தியம் முதலானதும் செய்து திருமேனியில் ஒத்தாடையிட்டு அழகு பெறப் பரி வட்டஞ்சாத்தி இரத்தினங்களாலிழைத்த கவசமிட்டு பூணூல் புரிந்து பொற்றுழை, வாகுவலயம், வயிரங்களினாலிழைத்த பதக்கம், மோதிரம், அரைஞாண் பொருந்தச்சாத்தி விபூதி சந்தனதிலதமிட்டு புஷ்பப்பணிகளுஞ்சூட்டி, அபநிபமலழங்கி சுத்தான்னம், பருப்புப்பொங்கல், புளியன்னம், சர்க்கரைப்பொங்கல் பாலடிசில், தயிரன்னம், தோசை, புட்டு, வடை, லட்டுகம், அதிரசம், மோதகம், தேன்குழல், இன்னும் அநேக அபூபவகைகளும், பானகம் நீர்மோர், இளநீர், சுத்தநீர், இவைமுதலிய இன்னும் பலவகைகளை மிக்க அன்புடன் தனித்தனியாக நைவேத்தியஞ்செய்து, பாத்தியம், ஆசமனீயம் அர்க்கியங்கொடுத்து தாம்பூலம் நல்கி, தூபம், அடுக்குத்தீபம் முதலாகிய பல ஆராதனைசெய்து வாசனைதங்கிய அநேகமலர்களால் அர்ச்சித்து நீராஞ்சனம் பண்ணி தீபமெடுத்துப் பருத்திவித்து, கடுகு, வேப்பிலை முதலியவைகளால் திருஷ்டிபரிகாரம் புரிந்து அத்திபத்திலே போட்டு தாம் விபூதி தரித்து; குடை, கவரி, ஆலவட்டம், சுருட்டி, விசிறி, முதலானவைகளால் உபசாரங்களியற்றி அர்க்கியங்கொடுத்து அநுமலர்களைக்கையின்கண் வைத்து பஞ்சாக்ஷரத்தை மனதில் செபித்து பதினொரு மந்திரத்தால் அர்ச்சித்துப் பஞ்சாங்க நமஸ்காரம்பண்ணி ஓரிடத்திலிருந்து தெரிசனத்திற்குவந்திருந்தயாவர்க்கும் பிரசாதம் நல்கி நம்பெருமானுடைய சந்நிதானத்தில் நிற்க; அருட்பெருங்கடலாகிய வள்ளலானவர் அம்பிகை முன் தோன்றி; உன்னிடத்து மயிலானது அபயமென்று சரணாகதியடைய அஞ்சலேயென்று திருவாக்களித்ததினாலும் நாமும் அவ்வுருவாய் அமைந்ததினாலும் அபயப்பிரதாம்பிகையெனவும் அஞ்சலாயகியென்றும் திருநாமங்களோடு நம்பக்கத்திலிருந்து சீவகோடிகளுடைய பாசபந்தங்களை நீக்கி அநுக்கிரகம்புரியக்கடவதென்று திருவருள் பாலித்து அவ்விலிங்கத்தின் கண்ணமர்ந்தருளினர். அக்கட்டளையின்படித்திருப்பெயர் தாங்கி எல்லாவுயிர்களும் ஈடேறும் வண்ணம் பெருங்கருணையே வடிவமாய அமர்ந்திருந்தருளினள்.

பிரமசாரியென்றிருவருந்தம் பேதமையால் பரப்பிரமய்யாம், பரப்பிரமய்யாம், என்ற செருக்கினால் வயிரவமூர்த்தியால அவர்கள் திருமேனிக்குண்டாகிய குற்றங்களையுமெண்ணத்தினால் உண்டாகிய தோஷங்களையும் நீக்கியருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்; அதற்கிரங்கி பொன்னிநதியில் விதிப்படி ஸ்நானம்பண்ணி உத்தமமாயூரத்தில் நம்பெருவடிவத்தைநாடி அங்கு ஆராதனை செய்து,

அச்சுற்றங்களை நீக்கிக்கொள்ளுங்களென உத்தரவுகொடுத்தார் அவ்விதமாகவே ஆராதனைசெய்து குற்றங்களை நீக்கிக்கொண்டு அதில் விஷ்ணுமூர்த்தியானவர்; பராசக்தியானவள் முன் மயிலுருவான காலத்தில் தாம், "பதுகைப் பின் வண்ணந்தங்கிய ஆரண்யமான திருவெழுந்தூர் என்னுந்திருப்பதியில் விசங்கன் மனல் ஆல்புவனைமக்கச்செய்து அதி பரிமளரெங்கநாதரென்னும் திருப்பெயரோடுசேவைசாதிப்பராயினர். அதற்கிணங்க, நம், தாயாரும் அமர்ந்தருளினள்; இவ்வற்புதங்கண்ட உடையவர் முதலிய, யதிவராதிகள் புஷ்பமாரி பொழிந்து அங்கு அமர்ந்திருந்தார்கள். பிரமதேவர் எல்லாவுயிர்களிடத்தும், இரக்கமுடையவர்களாயும், நல்ல தருமங்களைச் செய்பவர்களாயும், நித்தியகர்மானுட்டான அக்னி காரிய ஔபாசனாதிகளைப்பண்ணுகின்றவர்களாயுமுள்ள அந்தணர்கள்வசிக்கின்ற கிராமங்களையெல்லாம் தமதாலயமாக அமைவாராயினர். அவ்விதம் கலைமகளும், உபயபிரமர்களும்புஷ்பமாரி வருஷித்து அமர்ந்திருந்தார்கள்.

வெண்மலை வல்லியானவள் மயிலுருவடைந்த காலத்தில் அங்கனனார் விடையின் மீதுவருகின்றபோது, விடையாகியநந்தி தேவர் நம்மைப்போல துரிதமாய்ச்செல்லக்கூடியவர்கள், இல்லையென்று செருக்கடைய அதையறிந்த புண்ணிய மூர்த்தி பெருவிரலாலழுத்த பாதாளலோகத்தில் சென்று, இமைதாங்க முடியாமல், மாயூரநாதவள்ளலைப் பற்பல தோத்திரம் பண்ணுவாராயினர் பத்திவலையிற்படுகின்றஅண்ணலார்; அதற்கிரங்கி; அவ்விதஞ் செய்த இடமாகிய பொன்னிநதியின் மத்தியில் நீர் எப்போதும் எழுந்தருளியிருந்து அவ்விடத்தில் ஸ்நானம் பண்ணுகின்றவர்கட்கெல்லாம் இன்பங்களை அனுக்கிரகம் பண்ணுமென்று கட்டளையிட்டார் நந்திதேவரானவர், அவ்விதம் அனுக்கிரகத்தைப் பெற்று அடியேனுக்கு, எக்காலத்தும், கேர்வமில்லா திருக்கக் கூடிய ஞானமார்க்கங்களை உபதேசித்து அருளவேண்டுமெனப் பிரார்த்தித்தார். மாயூரநாத வள்ளலானவர், இவ்வுலகிலுள்ள தெய்வகங்கை முதலாகிய மூன்றரைக்கோடி தீர்த்தங்களும், ஐப்பசிமாதம் அமாவாசைதிதிமுதல் இந்நதியில் இவ்விடத்தில் ஸ்நானஞ்செய்ய வருவார்களாகையால், நாம், அவர்கட்கு அஞ்சலைநாயகியின், அற்புதத்திருவிழாவெனக்களிக்கும்படி தீர்த்த மகோற்சவங் கொண்டருளிபின் உத்தரமாயூரத்தில் குருவடிவமாய் எழுந்தருளுகின்றோம், அப்போது நீர் கேட்டவண்ணம் அனுக்கிரகம் புரிவோமென உத்தரவு அளித்தார்.

ஸ்ரீகண்ட ருத்திராகிய மாயூரநாதவள்ளலானவர், முன்சொன்னவிதம் குருவடிவமாய் எழுந்தருளினார்; தேவர்கள் பூமாரி

பொழிந்தார்கள், மேற்சொன்ன அமாவாசைதினத்தில் நந்திதேவ ரானவர் விதிப்படி ஸ்நானம் பண்ணி நித்திய கடன்களை முடித்துக்கொண்டு அருட்பெருங்கடலாகிய அண்ணலின் திருவடியைத் தியானித்து கண்மலர் கண்ணீர் ததும்பக் கைமலர்களால் பிசைந்து வண்ண மலர்ச்செங்கனிவாய், மணியதரம், புடை துடிப்ப எண்ணின் மறைமொழி பெருக, எவ்வுயிருந் தழைத்துவப்ப, பொருவிடையாகிய புண்ணிய மேவிட்டவரானவர், சந்நிதானத்தில் வந்து நமஸ்காரம் புரிந்து அம்மையே, அப்பா, ஒப்பிலாமணியே என்று தோத்திரம்பண்ணி முன் கட்டளையிட்டவண்ணம் அநுக்கிரகம் புரியும்படி பிரார்த்தித்துக்கேட்குமுறைமையில் தனியாக நின்றருளினர். குருமூர்த்தியானவர் கிருபாநோக்கஞ்செய்து நான்கு வேதங்களையும், ஆறங்கங்களையும், கற்றுணர்ந்து அதன் பயனை முநிவர்யர்களால் கேட்டுத்தெளிந்து அவ்வழியொழுகுபவராய், இட்டிகளும் பலவியற்றி ஈசனடிக்கன்புவைத்து இறவாத புகழ்படைத்தவர்கள், அடைதற்குரிய வேதாந்தத்தெளிவாம சைவசித்தாந்தத்தின் பயனாகிய சிவனடியைச்சித்திக்கலாகிய ஞானத்தையும் பவமதனை நீக்குதற்குரிய ஞானத்தையும் உவமையில்லாத கலைஞானத்தையும் "மகட்குத்தாய் தன் மணாளனோடாடிய சுகத்தைச்சொல்லென்றால் சொலுமாறெங்கனே" என்றவாக்கியத்தின் வண்ணம் அவரவர்களும் அநுபவித்தறிதற்குரிய ஆனந்த அநுபவமான உணர்தற்கரிமையாகிய மெய்ஞ்ஞானத்தையும், தீக்ஷைமுறையாலும், தம்திருமேனியில் அமைந்த சின்முத்திரை முதலாகியத் திருக்குறிப்புகளினாலும் உபதேசித்தருளினார். உத்தரமாயூரவள்ளலின் திருநோக்கத்தின்வண்ணம், ஞானபிம்மையும், அமர்ந்தருளினார். அப்பெருமையைக்கண்ட விநாயகர், சுப்பிரமணியர், முதலிய மற்றுமுள்ள மூர்த்திகளும் அமர்ந்திருந்தார்கள். நந்திதேவர் அநுக்கிரக உபதேசத்தைப்பெற்று இம்மாயூரக்ஷேத்திரத்தில் பெண்ணி நதியின் மத்தியில் மேற்கு முகமாக எழுந்தருளியிருந்து சிவகோடிகளுக்கு அநுக்கிரகம் புரிவாராயினர்.

புரந்தரன், நாரணன், பூவேறுகோன் முதலிய தேவர்கள், இம்மாயூரநாதவள்ளலாரிடம் வந்து சாஷ்டாங்க நமஸ்காரம் புரிந்து, எங்கள் நாயகமே திரிபுராதிகள் கொடுமையான இம்சைகள்செய்கின்றார்களென விண்ணப்பித்தார்கள்; பெருமான் அத்திரங்கி மகாமேருகிரியை வில்லாகவும், வாசுகியை நாணாகவும் கையிற்றாங்கி தேவர்கள் சூழ திரிபுராதிகள் இருக்குமிடஞ் சென்று யோசிப்பாராயினர்; நாம் இக்கணங்கள் மத்தியில் நின்று இத்திரிபுரதகனஞ்செய்வோமாயின் தேவர்கள் ஆணவமலத்தாற் கட்டுண்டு அவர்களுக்குள்ளாவார்கள், என்றெண்ணி பாணத்தையும் விட்டு அப்பாணந்தாக்குவதன்முன் நகைசெய்யினு

எரியும்படிச்செய்தார். அவ்வாச்சரியத்தைக்கண்ட தேவர்கள் மனநடுக்குற்று யாதுந் தோன்றாது பின்வருவதற்கு வழியுந் தெரியாது மாயூரநாதவள்ளலே யோலமெனப்பலவிதமாய் அலறினார்கள்; கிருபைக்கடலாகிய வள்ளலானவர், அதற்கிரங்கி, ஓர் கிராத வேடங்கொண்டு அங்கு சென்று என்ன சத்தமென விசாரித்தார்; கிராதரோமே எனக்கூவித்தாங்கள் சென்ற சரித்திரத்தையும், அங்குநடந்த வியப்பையும், வழிதெரியாமல் படுங் கஷ்டத்தையும், அறிவித்தார்கள்; ஐயன் புன்முறுவல் செய்து நாம்வழிகாட்டுகின்றோம், நம்பின் வாருங்களென அழைத்து வந்து இத்தலத்தின் குடகு திசையில், புன்னைச்சோலை சூழ்ந்தவிடத்தில் விட்டு மறைந்தருளினார். தேவர்கள் மனங்கலங்கி நாற்றிசையும் பார்க்கின்ற காலத்தில் அதிசமீபத்தில், ஓர் சிவலிங்கப்பெருமானைக் கண்டார்கள்; அதைப்பூசித்து, (மாயூரம்) வந்து வழிபாடு செய்து வழிகாட்டும் வள்ளலேயெனத்தோத்திரம் பண்ணி தமதிடம் போய்ச்சேர்ந்தார்கள்.

சைவபரமாசாரிய சுவாமிகளாகிய திருஞானசம்பந்த சுவாமிகள், தம் மெய்யடியார் கூட்டத்தோடு இத்தலம் தெரிசிக்கவருகின்ற காலத்தில் பொன்னி நதியானது, அதிக பிரவாகமாய் வர, இறங்கும் துறை தெரியாது மயங்கி விண்ணப்பஞ்செய்ய, உமைபாகருமானவர், அன்பு மேலீட்டினால் முன்சொன்ன கிராத வேடந்தாங்கி பொன்னி நதியின் வடகரைச்சென்று நான் துறை காட்டுகின்றேனெனச்சொல்லி முன்வர அந்நதியானது சிலவிடம் கணைக்கால் வரையில் நீருள்ளதாயும், சிலவிடம் மணல் தெரியும் படியாயும், இருக்கத்தென்கரை வந்தார்கள்; அப்போது முன் வந்த வேடுவர் மறைந்துவிடச்சண்பை நகர் வேந்தர், நாற்றிசையும் பார்த்து யோசிப்பாராயினார். அக்காலையில் அங்கொரு சிவலிங்கம்தோன்ற அதைப்பணிந்து, இவ்வாலயம் வந்து விதிப்படி தெரிசித்து துறைகாட்டும் வள்ளலேயென அருட்பாமாலை, சாத்தி விடைபெற்றுக்கொண்டு இதன் தென்பக்கத்திலுள்ள, ஸ்தலங்களைத் தெரிசிக்க விருப்புடன் சென்றார்கள்; இது முதலாகிய இன்னும் சிலகாரணங்களால், மாயூரநாதவள்ளலார்க்கு நாற்றிசை வள்ளலாரெனப் பெயருண்டாயிற்று.

அஞ்சலி காயமியானவன் சந்நிதானத்தில் வந்து நின்று நமஸ்கரித்து பிரபுவே; திருநடனக்காட்சி தந்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்தனன்; மாயூரநாத வள்ளலானவர், அதிகசந்தோஷமடைந்து தேவர்களையெல்லாம் அழைத்துவரும்படி, நந்திதேவருக்காக்ஞையளிக்க, அந்நந்திதேவருடைய அற்புதத்திருவாக்குக் கேட்ட எல்லாரும் மாயூரேசன் சந்நிதானத்தில் வந்து சேர்ந்தார்கள்; இடபத்திருமேனியாகவுடைய பெருமானை

ஆயிரம் முகத்தையுடைய, பாணுகம்பன் ஆயிரஞ்சங்கூத, ஆயிரந் தோளையுடைய வாணாசுரன் குடமுழா ஒலிப்பிக்க, பஞ்சதுந்துமி யொலியும், வேதவொலியும், கந்தருவருடைய கீதவொலியும், மிக்கெழ, அபயப்பிரதாயபிகையும் மற்றுமுள்ள தேவர்களும், ஆனந்தமாகக்கண்களிகூர்ந்து அரகராவென்னும் மெழக்கொலி செய்ய, நம்பெருமான் ஆனந்த நிருத்தஞ்செய்தருளினர். அந் நந்நாள்முதல் கௌரிதாண்டவமெனப் பெயருண்டாயிற்று. அவ்வித தெரிசனஞ் செய்த தேவர்களெல்லாரும் திருக்கல்யாண மகோற்சவ தெரிசனஞ் செய்யவேண்டுமெனத்தவம்புரிந்தார்கள். அத்தவத்திற்கிரங்கி, அன்பர்கட்கு அமுதமாகிய வள்ளலானவர் அவ்விதமேயருள் புரிந்தனர். அரி, பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் அதிசந்தோஷமுடையவராய் விசுவகர்மனை வரவழைத்து எல்லையைக் குறிப்பிட்டு அதனுள், நான்கு கோபுரங்கள் வாய்ந்த திருமதில்கள், ஆகமங்களில் விதித்தவண்ணம் ஆலயம் அமைக்கும்படி கட்டளையிட்டனர். அக்கட்டளையைச் சிரமேற் றாங்கி, கர்ப்பகிரக விமானங்கள், திருநடன மண்டபம், திருவாராதனை மண்டபம், திருக்கல்யாண மண்டபம், வசந்தோற்சவ மண்டபம், ஆகம வித்தியா மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், பாகசாலை மண்டபம், முதலாகிய பற்பல மண்டபங்களும் பளிங்கினுல் சுவரும், சில மேன்மையாகிய கற்களால தூண்கள், போதிகைகள், சாங்கள், உத்திரங்கள், கொடிங்கைகள், அமைப்பித்து அதன்மீது பொன் தகடுகள் பரப்பி ஏறிச்செல்வதற்குச் சுவர்ண ப்படிகளியற்றி, அம்மண்டபங்களின்மீது அலங்காரமாக இரசமணிகள், தொங்கவிட்டுத், தீர்த்தமப்படித்துறைகள் முதலாகிய யாவற்றும், இயற்றிவித்தனர்; தேவர்கள பார்த்து, கண் களி கூர்ந்து மிகக்களிப்படைந்து சிலர்கள் கல்யாணமண்டபத்தை அநேகக்கனிகளாலும், புஷ்பமாலைகளாலும், வாழைகளாலும், அலங்காரஞ்செய்து இரத்தினங்களாலிழைத்த, மணவறையியர்ப்படுத்தி அதில் பொற்பீடம் அமைப்பித்தார்கள்; சிலர்கள் அதற்கு வேண்டிய சாமான்கள் சேகரிப்பவர்களும், சிலர்கள் அங்குகாவாசிகளுக்குத் திருமுகம் விடுப்பவர்களும், சிலர்கள் அட்டில்கள் செய்பவர்களுமாயிருந்தார்கள்; இத்திருமுகத்தைதெரிசித்தயாவர்களும், ஐப்பசி மாதத்தின் தவத்தின் பிரயோசனத்தைக்குறித்து அதிக சந்தோஷமடைந்து, பந்து, மித்திர, குடும்பசமேதராய், சிலர்கள் யானையின்மீதும், சிலர்கள் குதிரையின்மீதும், சிலர்கள் சிவிகையின்மீதும், சிலர்கள் பாதசாரியாயும், வந்திறங்கினார்கள்; வருகின்றவர்கட்கெல்லாம், சிலர்கள் தாம்பூலங்கொடுப்பவர்களும், சந்தனம் பூசுபவர்களும், புஷ்பங்களைச்சூட்டுபவர்களும், அறுசுவையோடு அமுதளிப்பவர்களுமாயிருந்தார்கள்; அநேகவாத்தியங்கள் முழங்க தேவர்கள் தூவெண்மதிகுடிய

பெருமானைப் பிரார்த்தித்து, அழைத்து வந்து பொன்னாசனத்
தின் மீது எழுந்தருளச்செய்து கடகங்கணமணிவித்து, கும்பத்
தில் பூசைபுரிந்து, திருமணத்திற்குரிய நாளிடுதல் முதலாகிய
சடங்குகள் செய்து திருமஞ்சனச்சாலைக்கு அழைத்துக்கொண்டு
போய் கெங்கை முதலாகிய பரிசுத்தநீரினால் ஸ்நானம்பண்ணுவித்
துக் குடபத்து நன்னீராட்டி, நம்பியாரூராகிய சுந்தரமூர்த்தி
சுவாமிகள் பெருமானுடைய திருமேனியில் ஒத்தாடையிட்டு
தமமுக்கியபணியாகிய விபூதிவட்டகையைத் தாங்க ஞானமூர்த்
தியானவர் தம்பெருமை வாய்ந்தத் திருக்கரத்தினால் விபூதியை
எடுத்தணிந்தனர். பின் தேவர்கள் வேண்டுகோளுக்கிரங்கி திருச்
சடை நெற்றிக்கண் எலும்புமாலை பிரமகபாலம் புலித்தோலாடை
கரித்தோல் போர்வை இவைகளை மறைத்து, பொன்மயமானசுயம்
பிரகாசவடிவமாயினர். முக்தேவர்களும் ஐயனது சிரசில் உயர்
ந்த இரத்தினங்களால் இழைத்தகிரீடம் நெற்றியில் திலதம், திரு
ச்செவியில் அலங்காரவடம், இடையில் சுவர்ணங்கலந்த பட்டா
டையும், மேல் உத்தரியமும் கழுத்தில் முத்தாரங்களும்,
போழமைந்த பதக்கங்களும் பொற்பூணூலும், விரலணிகளும்,
அரைஞாண் முதலிய இவைகளும் அநேக திவ்யாபரணங்களும், அல
ங்காரஞ்செய்து, இவ்விதக் கோலத்தோடு பொன்மயமான விமானத்
தின் மீது திருவுலாக்காட்சி தந்தருள வேண்டுமெனப் பிரார்த்தி
த்தார்கள். அருட்பெருங்கடலாகிய அண்ணல் அதற்கிசைந்து
தடாரி, பேரி, முருடு, மொந்தை சின்னம் பம்பை, சங்கம், தாளம்
வீணை, இது முதலாகிய இன்னும், பற்பல வாத்தியங்கள் முழங்க
முத்துக்குடை, கொடி-கவரி, ஆலவட்டம், தாலவட்டம், அவுதா
க்கள், சுருட்டி, சேனைத்தடி, முதலாகிய பலவிருதுகள் முன்
செல, வேதபாராயணங்கள் தேவார திருவாசக பாராயணங்கள்
பின்வர, தேவர்களும் தேவதாஸிரீகளும, சூழ்ந்துவர பிரமா,
விஷ்ணு கைகொடுக்கப் பொற்பாதுகையின்மீது பாதசாரி
யாகவந்து மேற் சொன்ன விமானத்தில் ஆரோகணித்து உலாக்
க்காட்சி தந்தருள, அங்குள்ள ஸ்திரீகள் அநேகர்கள் சுயம்பிர
காச வள்ளலை உத்துநோக்குகின்ற போது மன்மதன், பஞ்சபா
ணங்களையு மெய்திய அதனால் மோகாந்தகாரமெனுங்கள்ளுண்டு
இடையிலே நெகிழ்ந்தவர்களும், வளையல்கள் கழன்றவர்களும், புன்
முறுவல் செய்பவர்களும், அனுபவித்தற்குரிய பலவார்த்தை
கள் சொல்பவர்களுமாயிருந்தார்கள். இவ்விதகாக்ஷியுடன் ஆல
யம் வந்துசேர்ந்து மேற்சொன்ன கலியாணமண்டபத்தின்கண்
ணுள்ள மணவறையமைந்த பொன்னாசனத்தில் வலதுகால்மடக்கி
அமர்ந்தருளினார், அரம்பை, ஊர்வசி முதலிய பொதுப்பெண்
கள் பக்கவாத்தியங்கள்முழங்க தாண்டவம்புரிய வல்லதம்பிரான்
முன்னர் பாதம் ஆடினார்கள்,

இலக்குமி, சரஸ்வதி, இந்திராணிமுதலிய தேவஸ்திரீகள் அஞ்சலைநாயகியைத்திருமஞ்சனச்சாலைக்கு அழைத்துக்கொண்டு போய் வாசனை தங்கிய, தயிலங்கள் தேய்த்து நன்னீர்களால் ஸ்நானஞ்செய்வித்து திருவொத்தாடையிட்டுப்பணிப்பெண்கள் விபூதி வட்டகையைத்தாங்க, தன்திருக்கரத்தினால் விபூதியை எடுத்துத்தரித்தனள். தேவஸ்திரீகள், சுவர்ணங்கலந்த பட்டாடையினால் இடையில் முன்கொசுவம் வைத்து சுருப்பித்து வலதுந்தோளினுத்தரீயம் இடடு கச்சணிவித்து அநேகப்பற்கள் வாய்ந்த சந்தச் சீப்பினால் கரிகுழல் வாரி நவரத்தினங்கள் இழைத்த இராக்குடி, வசந்தமுடிப்பு, சடைநாகம், சடைப்பில்லை, குஞ்சம், இவைகள் பொருந்தச்சடையாகப்பின்னி, சந்திரப்பிறை, சூரியப்பிறை வாகுசுட்டி நெற்றியில் திலதம், காதணிகள், மூக்குத்தி, நத்து, புல்லாக்கு, கழுத்தில் ரவிக்கையின்மீது முத்துமாலை, பவுன்மாலை காசை, மேன்மையான பதக்கங்கள் கரங்களில் வளையல் காப்பு, கொலுசு, பாட்டில், விரலணிகள், இடையில் ஒட்டியாணம், பாதங்களில் பாடகம், தண்டை, சிலம்பு, கொலுசு, கிங்கிணி, சதங்கை, முதலாகிய இன்னும் அநேக திருவாபரணங்களால் அலங்காரஞ்செய்து ஐயனது பக்கலில் அமர்ந்திருக்கச்செய்தார்கள். அத்தனும் அம்மையும் நாமே எனது நாயகன் என்றும், நீயே, எனது நாயகி என்றும் குறிப்பமையும்படி மாலையிட்டுக்கொண்டார்கள். அனுக்ஞை விக்கினேசுரபூசை கும்பத்தில் பூசை பாலிகைவைத்தல் முதலாகிய இன்னும பலசடங்குகளியற்றி உலகங்கள் வாழும் பொருட்டு கங்கணம் அணிவித்தார்கள். விஷ்ணுமூர்த்தியானவர் இருவர்களையும் மனசினால பூசித்து இருவர்களுடைய பெரும் புகழ் கூறி அபயப்பிரதம்பிகையைம் பூராதவள்ளலாருக்குக்கன்னிகாதானஞ்செய்துகொடுத்தோமென இட்டு நீர்வார்த்தார். தேவர்கள் எல்லோரும அஞ்சலிசெய்து அரகராவென்று ஆரவாரித்தார்கள். பிரமதேவன அக்கினிகாரியஞ்செய்ய அநேகவாத்தியங்களும் தேவதுந்துமியும கடல்போல் ஒலிப்ப, மாயூரநாத வள்ளலானவர் மூவுலகும் வாழும்படி அம்மையின் கழுத்தில் நலம் அமைதரத்திருமங்கலசூத்திரத்தைத்தரித்தருளினர். தேவர்களும் மற்றும யாவர்களும் சந்தனம் புட்பம், மாரியாகப்பொழிந்தார்கள். வள்ளலானவர் அம்பிகையின் கைவிரலைப்பிடித்து ஓமாக்கினியின்முன்பாகச், சென்று அக்கினிபகவானுக்குத்திருப்தி உண்டாகும வண்ணம் இருவருகளும் பொரியிட்டு புட்பம் நிறைந்த அம்மியின்மீது அஞ்சலைநாயகியின் பாதத்தை, ஒருகரத்தால் தூக்கிவைத்து அருந்ததியைத்தெரிசிக்கும்படிச்செய்து அக்கினிவலம் வந்து முன்சொன்ன பொற்பீடத்தின்மீது, அமர்ந்திருந்தார்கள். தேவர்களும் தேவஸ்திரீகளும் அக்ஷதையால் மணமும் மாலை

பொற்பணமும் இட்டு வாழ்த்தொலி கூறினார்கள், பொன்மலைவல்லி யும் புனிதனாரும், இளம்பரிதி நூறாயிரங்கோடி போல கட்டழகு திப்ப, வெள்ளிரதத்தின்மீது ஏகாசனத்தில் எழுந்தருளி முன் சொன்னவாறு தங்கள் வாத்தியங்கள் முன்செல வேதபாராயணர் தமிழ் வேதபாராயணம் பின்வர, சேகர்களும் தேவதாஸ்திரீ களும் ஆடித்துதிக்க திருமணத் திருவலக் காக்ஷி தந்தருளி னர். அங்கு வந்திருந்த சுள்ள புமான்களும், ஸ்திரீகளும் பூரணகும் பங்கள் வைப்பாரும் கற்பூர ஆரத்திகள் எடுப்பாரும் தாம்பூலம் கொடுப்பாரும், சந்தனச் சேறு இறைப்பாரும், பன் னீர் தெளிப்பாரும், கனிவகைகளைக் கொடுப்பாரும் கற் கண்டு ஈவாரும், பூரிதக்ஷிணை அளிப்பவரும் தீபத்தினால் திருஷ்டி பரிகாரம் புரிவாரும், அநேகர்கள் இவ்வ ருமையான மானுட ஜென்மம் பெற்றதின் பிரயோசனம் இத்தெ ரிசனம் பண்ணப்பட்டதே. என்று புகழ்வாருமாய் ஆலயம் வ ந்து பின், செய்ய வேண்டியச் சடங்குகளைச் செய்து முடித்துக் கொண்டு யாவர்களையும், பரானந்தமயமாக்குவித்தற்குரிய பொ ன்னி நதிக்குச் சென்று தீர்த்த மகோற்சவங் கொண்டருளி ஆலயம் வந்து சேவர்கள் முதலிய யாவர்கட்கும் விருந்தமுதளி த்து தாம்பூலம், சந்தனம், புட்பம், வஸ்திரம், ஆபரணங்கள் அ ளித்து அவரவர்கள் இருக்குமிடஞ் செல்லும்படி உத்தரவு கொடு த்து இலிங்கத்தின் கண்ணெழுந்தருளினர், அஞ்சலை நாயகியான வள், அடியார்களை அஞ்ச வேண்டாமென ஆதரிக்கும் குறிப்பை ஓர் கரத்தினால் காட்டி, மற்றொரு கரத்தை இடுப்பினில் தரித்து வீற்றிருந்தருளினாள். இவ்வற்புதங்கண்ட, விநாயகர், சுப்பிரம ணியர், ஆறுமுகப்புனிதவேள், மற்றுமுள்ள மூர்த்திகளும் இவ் வாலயத்துள் அமர்ந்தனர்கள்.

முன் கற்பகாலவிறுதியில் இவ்வுலகின் கண்ணுள்ள மூன்றரை க்கோடி தீர்த்தங்களும் ஜீவர்கோடிகள் ஸ்நானம் பண்ணுவதி னால் அப்பாவங்கள் அவைகளைச் சார்ந்து சரீரங்கறுத்து அதனால் துன்பமடைந்து அக்குற்றங்களை நீக்கிக்கொள்ளும் வண்ணம் கைலாயத்தில் சென்று தவஞ்செய்தார்கள். கண்ணுதல் பிரான் அவர்கள் கருத்தையறிந்து கௌரிமாயூரஞ்சார்ந்து பொன்னி நதி யில் இடபதீர்த்தக்கட்டத்தில் ஐப்பசி மாசத்தில் ஸ்நானஞ்செய்து அக்குற்றத்தை நீக்கிக்கொள்ளும்படி கட்டளையிட்டனர். அத் தீர்த்தங்கள் ஆசையினால் சீக்கிரம் வருதற்குரிய பாவை வடி வங்கொண்டு, வந்து கட்டளையின்படி ஸ்நானஞ்செய்து வள்ளலா ரையும், அஞ்சலைநாயகியையும் அடிபணிந்தேத்தி அக்குற்றங் களை நீக்கிக்கொண்டு அவரவர்கள் இருக்குமிடஞ்சென்று ஒவ் வொரு வருடங்களிலும் வருகின்ற ஐப்பசி மாசத்தில் மேற்கூறிய

னாறு செய்துமீள்வாராயினர்கள். அதில் தெய்வ கெங்கையும் அவ்விதமாக ஒவ்வொரு வருடத்திலும் ஐப்பசி மாசம் அமாவாசை திதி முதல் வந்து இத்தீர்த்தத்தில் படிந்து நாற்றிசைவள்ளலையும், அபயப்பிரதாம்பிகையையும் அடிபணிந்தேத்தி ஆராதனைசெய்து அம்மாதம் முடிந்தவுடன் விடைபெற்றுக்கொண்டு திருநந்திதேவர் செல்வழிகொண்டேகக்காசிக்குச்செல்லும் காரணத்தாலே இத்தலத்துள்ள விருப்பத்தினாலே (காசி) விசுவநாதர், திருமகளாகிய தெய்வகங்கை வருகின்றதினைத்து தேவதுந்துபிமுழங்க, தேவர்கள் பூமாரி பொழிய இப்பொன்னி நதியின் தென்கரைசார்ந்து இலிங்கவடிவமாய் அமர்ந்தருளினர். அவ்விதமாக விசால நேத்திரம் பொருந்திய அன்னபூரணியாகிய அம்மையும் அமர்ந்தனள். இவ்வமபுசக்கண்ட, துண்டிவிநாயகர், சுப்பிரமணியர், பைரவர், தண்டபாணியாரும் ஆலயத்திலும் தீர்த்தக்கட்டத்திலும் அக்காசிக்ஷேத்திரம் எத்தன்மையதோ அதிலும் விசேடமாய் அமர்ந்தார்கள்.

விரிகடலால் சூழ்ந்த இக்காசினியில் மேன்மையான தேவ அந்தணர் குலத்தில் நாதசன்மன் என்னும் நற்பெயர் தாங்கி கற்பிற் சிறந்த அனவித்தை என்னும் மனைவியோடிருந்து இல்லறம் நடாத்தி, கடவுளர்க்கு அன்பரென்றால் அவரே நம்மை ஆண்பவர் என்றும் சரியையின் ஞானத்தினை அநுட்டித்து வந்தார். அத்தவத்தினால் அவ்விருவர்களும், கைலையையடைந்து குவித்த கையுடையவர்களாய் இரண்டரக்கலக்கும் இன்பம் வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள்; அப்பிரார்த்தனையறிந்த புலித்தோல் தரிக்கும் புனிதரானவர் வையகஞ்சென்று நமக்கு வழிபாடுசெய்து அவ்வரங்களை நீங்கள் அடைவீர்களென, அனுமதி கொடுத்தார். அவ்விதமாக இத்தரை வந்து அதற்குரிய ஸ்தலம் யாதென ஆராய்ச்சிசெய்து விருத்தாசலம் வந்து, ஸ்தானம் ஆராதனை விதிப்படிச்செய்தார்கள். அத்தலத்தமா பெருமான் அன்புமேலீட்டினால் ஐயாறடைகென அருள்வழங்கிட்டார். அவ்விதமாக ஐயாற்றாசையும, அறம்வளர்த்த செல்வியையும், ஆராதனை செய்ய; அவர் குறிப்பறிந்து அதற்குரிய தலம் காசியிலும் மிக்கது கௌரிமாயூரமோமாம்; நமக்கும் அத்தலத்தில் விருப்புளது நம்பின் வாருங்களென மாயூரம வந்து அவர்களை நோக்கி இந்த க்ஷேத்திரத்தில் பொன்னி நதியில் இடப தீர்த்தத்தில் ஸ்நானம் விதிப்படி புரிந்து கயாசிரார்த்தம் பிண்டம், தர்ப்பணஞ்செய்து மாயூரநாதவள்ளலையும் அஞ்சொல்நாயகியையும், அன்போடு வணங்கி உத்தரமாயூரஞ்சார்ந்து உபதேச அனுக்கிரகம் பெற்று தெட்சணமாயூரத்தில் திருப்பெறக்கடவதென திருவாய்மலர்ந்து திருவையாற்றுக்குச்செல்ல திரும்பினர் செல்வர். அந்த

நற்காலையில், நாதசன்மன், அனவித்தை இருவர்களும் அடியேங்களை ஆட்கொள்ளும் இடமிதுவாதலால் எக்காலத்தும் இவ்விடத்திலெழுந்தருளி ஏழைகட்கிரங்கி இன்பம் அனுக்கிரகிக்கவேண்டுமெனப் பிரார்த்தனை செய்தார்கள். அவர்களிடமுள்ள அன்பு முதிர்ச்சியால், திருவையாறு செல்லுந்திருக்குறிப்பாக, இலிங்க வடிவமாய் எழுந்தனர் பெருமான். அக்குறிப்பின் வண்ணம் அமர்ந்தனள் பிராட்டி. அவ்வற்புதங்கண்ட விநாயகர், சுப்பிரமணியர் முதலாகிய மூர்த்திகளும் நந்திபம்பெருமான் முதலாகிய தேவர்களும வடகையிலே, தென்கையிலே இரண்டும் ஒன்றாய்க்கூடியது கௌரிமாயூரமெனச் சந்தோஷமடைந்து ஆகாசவெளி முழக்கொலிசெய்து புட்பமாரிபொழிந்து அமர்ந்திருந்தார்கள்.

நாதசன்மன், அனவித்தை என்னும் இருவர்களும் முன் கட்டளையிட்டபடி ஸ்நானஞ்செய்து உத்தரமாயூரத்தில் உபதேசம்பெற்று அதைச்சார்ந்த கருணபுரம், நான்தோன்றீச்சுரம், கஞ்சாறு, தருமபுரம் முதலாகிய தலங்களை ஆராதனைசெய்துகொண்டு மாயூரம் வந்து வள்ளலாருக்கும் அஞ்சலைநாயகிக்கும் அருந்தொண்டு புரிந்தார்கள். அன்பினுக்கெளிய ஐயன் பிரசன்னமாகி இவர்கள் கருத்தையறிந்து இந்தக்ஷேத்திரத்தில் நம்பக்கத்தில் நீரும் அபயம்பிரதாம்பிகையின் வலப்பக்கத்தில் உமது மனைவியும் நம்மை இலிங்கபிரதிஷ்டைபண்ணி சில்நாள் பூசித்துவருவீர்களாயின். உங்கள் கருத்தின் வண்ணம் பரமுத்தியனுக்கிரகம் பண்ணுகின்றோம் எனத்திருவாக்களிக்க அவ்விருவர்களும் சந்தோஷமாகி, நாங்கள் ஆராதனைசெய்யும் அழகிய வடிவத்தை யாவர்களும் தெரிசனஞ்செய்யும்படி கட்டளையிட்டருளவேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். அதற்குமனமிரங்கி நம்மை தெரிசிக்கும் தேவர்களும் மற்றும் யாவர்களும் நீங்கள் பூசித்துவரும் நம் திருவுருவத்தை தெரிசியாவிடில் நம்மை தெரிசித்த பலனையடையமாட்டார்கள் எனத்திருவாக்குக்கொடுத்து அவ்விதஞ்செய்யக்கடவதெனத்தேவர்கட்குங்கட்டளையிட்டருளினார். அவ்விருவர்களும் மேற்சொன்னவண்ணமாக இலிங்க பிரதிஷ்டைசெய்து பூசித்துவருவாராயினார்கள். மாயூரநாதவள்ளலாரும் அவ்விலிங்கத்தின்கண் அமர்ந்தருளினார்.

இன்னும் நைமிசமுனிவர்கள், அகத்தியர், கண்ணுவர், புலத்தியர், காசிபர், முதலாகிய அநேக முனிவர்களும், ஜனகாதியர்களும், தாருவனத்தில் பூர்வமீமாஞ்சையில் விதித்த பிரகாரம், கர்மமே, பிரமப்பொருளெனக்கொண்டு தவஞ்செய்த நாற்பத்தெண்ணாயிரம், ரிஷீசுரர்களும், அவர்கள் பத்தினிமார்களும், இலக்குமியும் கலைமகளும் அயோத்தியாபுரியை ஆண்ட திலீபன், தசரதன், முதலிய சக்கிரவர்த்திகளும், இலங்கை வேந்தனும், அஸ்தினபுரியையாண்ட பாண்டு, பஞ்சபாண்டவர்கள் முதலாகிய

மகா இராஜாக்களும், யானை, குதிரை, நரி, குரங்கு முதலிய மிருகவர்க்
கங்களும், கழுகு, கிளி, முதலாகிய பறவை வர்க்கங்களும் பாம்பு
முதலிய ஊர்வனவும், பொன்னி நதியின் மணல்களைக் கணக்கிடி
னும் அப்பொன்னி நதியில், இடபதீர்த்தக்கட்டத்தில் ஸ்நானம்
பண்ணி மாயூரநாத வள்ளலையும், அஞ்சலை நாயகியையும், மற்
றும் அந்த க்ஷேத்திரத்துள்ள மேற்சொன்ன ஆலயங்களிலும்
அடிபணிந்து அர்ச்சித்து ஆராதனை செய்து அவரவர்கட்கு வேண்
டிய இஷ்டகாமியங்களையடைந்தும், இவைகளை அநுபவித்தவர்
களை கணக்கிடுவதற்கு முடியாது. இவ்வித விசேஷமமைந்த
இந்த க்ஷேத்திரத்தில் ஒவ்வொரு வருடங்களிலும் வருகின்ற ஐப்
பசி மாசங்களில், இப்பொன்னி நதியில் இடபதீர்த்தக்கரையில் ஸ்நா
னம் பண்ணுகின்ற ஜீவகோடிகட்கு இஷ்டசித்திகளை அனுக்கிரகம்
பண்ணும்பொருட்டு, தெட்சண மாயூரவள்ளல், உத்தரமாயூர வள்
ளல், விசுவநாதர், ஐயாற்றரசர், ஒவ்வொருவரும் அம்பிகா
சமேதராய், விநாயகர், சுப்பிரமணியர், சண்டேசர், புடைசூழமாதப்
பிரவேசம், அமாவாசை முதலிய புண்ணிய தினங்களிலும், பிரம
மகோற்சவங்கொண்டருளியும், இடபவாகனம் முதலாகிய பற்பல
வாகனங்களிலும், மகா இரதங்களிலும் இச்சிவாலய மகாவீதிக
ளில் திருவுலாக்காட்சிதந்தருளியும்; பரிமள ரெங்கநாதர் ரங்க
தாயார் சமேதராய், உடையவர் முதலிய பக்தர்கள் புடைசூழ
கெருடவாகனம் முதலிய பற்பலவாகனங்களிலும், மகா இரதத்
திலும் அவ்வைகுந்த மகா வீதியில் திருவுலாக்காட்சியாகிய
சேவை சாதித்தருளியும் தீர்த்த மகோற்சவ அனுக்கிரகம்புரிந்து
வருதில் யாவர்களும் அறிந்த விஷயமேயாம். ஆன, பூமி புத்திரன
புத்திரி, அருள், சுவர்க்கம், சிவானந்தப் பேறாகிய இவை அநேக
விதப்பேறுகளுள், யார் யார், எந்தவேண்டுதலும் அவ்விதமே செய்
தற்குரிய, இம்மாயூரத்தலத்தையும், தீர்த்தங்களையும் முறையாய்
அடைய விரும்பினவர், தாம் பாவத்துக்குப் பயந்து தருமநெறியா
லேதேடிய பொருள்கொண்டு யாத்திரை பண்ணுக. சுபதினத்
திலே நித்திய கருமமுடித்து, இயன்றமட்டில் மகேசுரபூசையும்
பிராமணபோஜனமும் நடத்திக்கொண்டு சுபமுகூர்த்தத்திலே
புறப்படுக, காமக்கோப முதலிய குற்றமனைத்துந்தீர்த்து நாடோ
றுஞ்சிவபுராணமுஞ்சைவநூலும் படித்தல் கேட்டல் செய்து,
ஒருபொழுது புசிக்க. புசிக்கும் பொழுது வந்த வறியவருக்கு
மறுக்காது ஒரு பிடியன்னமாயினுங்கொடுத்துப்புசிக்க. வழி
யில் இடையிடையே நேர்பட்ட சிவாலய விக்கினேசுராலய சுப்பிரம
ணியாலயங்களைத் தப்பாது அடைந்து, தரிசித்து வணங்கிச்செல்க.
இப்படிச்சென்று, கௌரிமாயூரத்தினது திருவெல்லையை அடை
ந்து, திருக்கோபுரத்தை தூரத்தேகண்டவுடனே, மனமுருகக்
கண்ணீர்ததும்ப, உரோமஞ்சிலிர்ப்ப, இரண்டு கைகளையுஞ் சிர

...து த...து அப்பூமியில் விழுந்து பலமுறை நமஸ்கரித்து எழுந்து சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு நடக்க. வழியில் இடையே நமஸ்காரஞ்செய்து ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு சென்று கௌரிமாயூரத்தை அடைக.

கௌரிமாயூரத்தை அடைந்தவுடனே, அத்தினத்தில் மௌனவொழிந்து க்ஷௌரம்பண்ணுவித்துத் திருக்கோயிலுக்குப் புறத்தே ஸ்நானஞ் செய்து விபூதிதரித்துக்கொண்டு, பொன்னி நதியை அடைந்து ஆசமனம்பண்ணி வலக்கை ஆழிவிரலிலே பவித்திரஞ் சேர்த்துச் சற்பிராமணரெதிரே குட்டிக் கும்பிட்டுப் பிராணாயாமம் முஞ்சகலீகரணமுஞ்செய்து சங்கற்பஞ் சொல்லி ஸ்நானம் பண்ணுக. ஸ்நானஞ்செய்தவுடனே, கரையேறி, சாந்துவட்டி, வஸ்திரம் இரண்டு தரித்துக்கொண்டு, சந்தியாவந்தன முதலியன முடித்து, க்ஷேத்திரபிண்ட பிதுர்க்கள் நிமித்தம் காபாசிராத்தஞ்செய்து பிராமணருக்குத் தம்மால் இயன்ற தானஞ்செய்து ஸ்ரீ பஞ்சாட்சரத்தை நூற்றெட்டுருச்செபிக்க.

அதன்பின் மயூரநாதவள்ளலின் கீழ்க்கோபுரவாயிலை யடைந்து நமஸ்கரித்து ஆலயத்தினுள்சென்று முன்சொன்ன விதிப்படி பிரமதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, ஆலயவலஞ்செய்து உள்ளே சென்று முறைப்படி தரிசித்து அனலிலிடப்பட்ட மெழுகுபோல மனங்கசிந்துருகக் கண்களினின்றும் ஆனந்தவருவி பெருக, மெய்ம்மயிர்சிலிர்ப்ப, நாத்தழுதழுப்பத், தோத்திரம் பண்ணி மீட்டும் வலஞ்செய்துகொண்டு சந்நிதியை அடைந்து, முன்போல நமஸ்கரித்து இருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை நூற்றெட்டுருச்செபித்துக்கொண்டு எழும்புக.

அதன்பின் அஞ்சலைநாயகியின் திருக்கோயிலை அடைந்து, நமஸ்கரித்து முறைப்படி தரிசித்து சந்நிதியில நமஸ்காரஞ்செய்து தேவிதிருமந்திரத்தை நூற்றெட்டுருச்செபித்துக்கொண்டெழுந்து திருக்கோயிலெல்லையைக் கடந்து, உறைவிடத்தை அடைக. இக்கௌரிமாயூரத்தில் மேற்சொன்ன மற்றுமுள்ள ஆலயங்களிலும் இவ்விதம் வழிபாடுசெய்க. அன்றிரவுகளிலும் இப்படியே தரிசித்துக்கொண்டு, நித்திரை செய்து சூரியோதயத்துக்குமுன் எழுந்து அவசிய கருமமுடித்து பொன்னிநதியில் ஸ்நானஞ்செய்து சற்பிராமணருக்கு இயன்ற தானங்கொடுத்து, இயன்றமட்டும் மகேசுர பூசையும் பிராமணபோசனமும் நடத்திக்கொண்டு, தம்மௌனத்தோடு போசனம்பண்ணுக. இந்த க்ஷேத்திரத்தில் இப்படியே ஆயுளெல்லைவரையினும், ஒருவருஷமாயினும் ஒவ்வொருவருஷத்திலும் வருகின்ற ஐப்பசிமாசமாயினும். அதி

பதினைந்து நாளாயினும், ஒரு நாளாயினும், மூன்று நாளாயினும், நியமத்தோடு இத்தலத்தில் அந்தணர் துறவிகளுக்கும் வறியவர்களுக்கும் ஒருபிடி அன்னமாயினுங் கொடுத்தே புசிக்கச் செய்து க்ஷேத்திரமேச சிவதீர்த்தத்தைக் கொண்டு துகிலைத் திருநந்தனவனத்தைத் திருமடத்தை எச்சில் மலஜலம் புணர்ச்சி முதலியவைகளால் அசுசிப்படுத்தல், கன்றிமறைத்தல் சூதாடல் விபசாரம், கொலை, களவு முதலிய பாபங்களை மறந்துஞ்செய்யாது சிவத்தியானம், புண்ணியதீர்த்தஸ்நானம், சந்தியாவந்தனம், சிவபூசை, சிவாலயப்பிரதக்ஷிணம், சிவாலயதரிசனம், வேதபாராயணம், தேவாரதிருவாசக பாராயணம், சிவபுராணங்கேட்டல், சிவசாத்திரம்படித்தல், குருவாக்கியபரிபாலனம், மாகேசுவரபூசை, திருவீதிப்பிரதக்ஷணம் முதலிய சிவபுண்ணியங்களை தம்மால் இயன்றபோது நாடோறும் நியமமாகச்செய்துகொண்டு, இந்தக்ஷேத்திரத்தில் வசிக்க.

தாங்கள் முன்செய்தபாபங்களை நினைந்து நினைந்து நடுநடுங்கி மனமுருகிக் கண்ணீர்வார பச்சாத்தாபம் அடைந்து, பொன்னி நதியில் ஸ்நானஞ்செய்து சிவதரிசனம் இந்த க்ஷேத்திரவாசமுதலியன செய்தவருக்கு அப்பாவங்கள் நீங்கும். பின்பு பாவஞ்செய்யலாகாது, புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானமுதலியன செய்துகொண்டு நாம் பாவஞ்செய்யினுந் தண்டிக்கப்படோம். என்று ஒருபொழுதும் ஒருசிறிதும் எண்ணலாகாது. எண்ணிமீட்டும் பாவஞ்செய்தவருக்கு அப்பாவம் நீங்காது, இந்த க்ஷேத்திரத்தில் இருந்துகொண்டு புண்ணியஞ்செய்யின், ஒவ்வொரு புண்ணியமும் பற்பலபுண்ணியமாய் ஓங்கும். அதுபோலவே அங்கிருந்துகொண்டு பாவஞ்செய்யினும், ஒவ்வொரு பாவமும் பற்பல பாவமாய் ஓங்கும். ஆதலினாலே யாவரும் தாந்தாம் மனம் வாக்குகாயங்களினாலே பாவஞ்செய்யாவண்ணம் தம்மைக்காத்து அருள்செய்யும் பொருட்டுச் சிவபெருமானை பிரார்த்தித்துக்கொண்டு, அவர் திருவருள்வழியே சாந்தமாக ஒழுகுக. இப்படி ஒழுகும் அன்பர்கள் இம்மையில் இஷ்டகாமியங்களையும் மறுமையில் மோட்சத்தையும் அடைவார்கள்.

அக்ஸ்ரமமும் இத்தலத்தில் மஞ்சள், புஷ்பம், குங்குமம் கண்ணாடி அரிசி. உளுந்து, பச்சைப்பயறு முதலாகிய தானியங்களும், பொன், பூமி, அன்னம், வஸ்திரம், தேங்காய், வெல்லம். கனிகள், கன்னிகை முதலாகிய தானங்களை அன்புடன் அளிப்பவர்கள் அத்தானபலன் ஒன்று பலவாகி அது அதற்குரிய இன்பங்களையும் அனுபவித்து மேலாகப்பதவிகளையும் அடைவார்கள். இவ்விதம் செய்தற்குரிய பொருள்களும் சரீரசக்தியும் இல்லாதவர்

திருக்கணைத் தடைபவர்களாய், விபூதிதரித்து ஸ்ரீமாயூரமென்று தியானஞ் செய்வார்களாயின் அவர்களுக்கு வேண்டும் சுகாதிபோகங்கள் முதலாகிய இன்பங்களையும் பெறுவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

"பாரூத்த மாயூரத்தில் வாழ்ந்தருள் வள்ளற் பரமன் வாழ்க
வேரூத்த கருந்தடங் கணஞ்சனநாயகி வாழ்க சிவநெறிக்கென்று
நாரூத்த மனத்தன்பர் வாழ்க பெருஞ்சைவ நெறிநன்கு வாழ்க
சீரூத்தவம்பலத்து ஆனந்த நடனவில் குஞ்சிதத்தாள் வாழ்க

(திருஞானசம்பந்தர் திருவடிவாழ்க)

(முற்றிற்று)

S. V. Press. Mayavaram.